

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி யில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்ட படகுகளின் உரிமையாளர் களுக்கு நிவாரண நிதியுதவித் தொகைக் கான ஆணைகளை, இயற்கை வளங் கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா தலைமையில் வழங்கினர். உடன், அறந்தாங்கி சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், உதவி இயக்குநர் (மீன் வளத்துறை) ந.பஞ்சராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி – கோத்தகிரி நகராட்சி காந்தி மைதானத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை, அரசு தலைமை கொறாடா கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட அவை தலைவர் போஜன், தலைமை பொதுக்குழ உறுப்பினர் திரு. வீரபத்திரன், கோத்தகிரி ஒன்றிய கழக செயலாளர் நெல்லை கண்ணன், கீழ் கோத்தகிரி ஒன்றிய கழக செயலாளர் பீமன், கோத்தகிரி நகர்மன்ற தலைவர் திருமதி ஜெயகுமாரி, அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அனைத்து பராமரிப்பு பணிகளும் முடியும் வரை சுங்க கட்டணம் வசூலிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமா?

# தேசிய நெடுஞ்சாலையை பராமரிக்காத ஒப்பந்த நிறுவனத்திற்கு எதிராக ஆணையம் நடவடிக்கை எடுக்குமா?

## மக்களவையில் – கோவை கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!

**புதுடெல்லி, ஆக. 1– மக்களவையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார் எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

இந்திய தேசிய நெடுஞ்சாலையை முறையாக பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையை மீறிய ஒப்பந்த நிறுவனத்திற்கு எதிராக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா?, மற்றும் அனைத்து பராமரிப்பு பணிகளும் முடியும் வரை சுங்க கட்டணம் வசூலிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமா?

தேசிய நெடுஞ்சாலைகள் (NHs) சரியான நேரத்தில் மற்றும் முறையான பராமரிப்பு இல்லாததால், சிற்றுண்டிக் கடை, உணவுக்கூடம், முறையான பார்க்கிங் பேக்கள் மற்றும் சாலை, கார் பயணிகளுக்கு ஓய்வு அறைகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாததால், பல பயணிகள் சுங்கக் கட்டணம் செலுத்தியும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர், இது தொடர்பாக அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?, சாலையை முறையாக பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையை மீறிய ஒப்பந்த நிறுவனத்திற்கு எதிராக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா மற்றும் அனைத்து பராமரிப்பு பணிகளும் முடியும் வரை சுங்க கட்டணம் வசூலிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமா?

தேசிய நெடுஞ்சாலைகளில் (NH) கார் சாலைப்பயன் படுத்துபவர்களின் வசதிக்காக மேற்கண்ட குறைபாடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா? அப்படியானால், அதன் விவரங்கள், இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்



குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

**ஒன்றிய அமைச்சர் பதில்!**

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஸ்ரீ நிதின் ஜெய்ராம் கட்கரி அளித்துள்ள பதில் வருமாறு :- தேசிய நெடுஞ்சாலை நீட்டிப்புகளைப் பராமரிப்பது தொடர்பான புகார்கள், அவற்றின் தீர்விற்காக உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அமலாக்க முகமைக்கு அனுப்பப்படுகின்றன. புகார்களில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் ஒப்பந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி ஏஜென்சி (சலுகைதாரர் - ஒப்பந்ததாரர்) மூலம் சரி செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சலுகை - ஒப்பந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி சம்பந்தப்பட்ட NH நீளத்திற்குப் பொறுப்பான சலுகைதாரர் - ஒப்பந்ததாரர் கூறப்பட்ட நீட்டிப்பைப் பராமரிக்கத் தவறினால், பராமரிப்புக் கடமைகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும் ஒவ்வொரு நாளுக்கும் சேதங்கள் விதிப்பது உட்பட பொருத்தமான நடவடிக்கை அத்தகைய சலுகைதாரர் - ஒப்பந்ததாரருக்கு எதிராக விதிக்கப்படும். மேலும், செயல்பாடு மற்றும் பராமரிப்பைக் கண்காணிக்க சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட மேற்பார்வை ஆலோசகர்களும் ஆலோசனை ஒப்பந்தங்களின் விதிகளின்படி பணியில் உள்ள குறைபாட்டிற்காக தண்டிக்கப்படுவார்கள்.

தேசிய நெடுஞ்சாலைகளின் (NH) எந்தப் பகுதிக்கும் கட்டணம் வசூலிப்பது, அரசு கெஜட்டில் வெளியிடப்பட்ட டோல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின்படி (அதன் மறுபரிசீலனை உட்பட) நிறைவுச் சான்றிதழை வழங்குவதன் மூலம் NH இன் கூறப்பட்ட நீளத்தை முடித்தவுடன் மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய நெடுஞ்சாலைகளை (NH) பராமரிப்பதைப் பொறுத்தவரை, இது ஒரு தொடர்ச்சியான செயல் முறையாகும், மேலும் சலுகைக் காலத்தில் பொது தனியார் கூட்டுத் திட்டங்களில் (PPP) சலுகையாளர்கள் மூலமாகவும் ஒப்பந்ததாரர்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகிறது. அந்தந்த சலுகை ஒப்பந்தம், ஒப்பந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்புத் தேவைகளுக்கு இணங்க, குறைபாடு பொறுப்புக் காலத்தில் (DLP) பொறியியல் கொள்முதல் ஒப்பந்தங்கள் (EPC) திட்டங்களில். சலுகைக் காலம், DLP முடிவடைந்த NH பகுதிகளுக்கு, செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) அல்லது குறுகிய கால பராமரிப்பு ஒப்பந்தம் (STMC) மூலம் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான கொள்கை முடிவை ஒன்றிய அரசாங்கம் எடுத்துள்ளது. STMC பணிகள் பொதுவாக 1-2 வருட ஒப்பந்த காலத்திற்கு மேற்கொள்ளப்படும் போது, PBMC பணிகள் சுமார் 5-7 ஆண்டுகள் நீண்ட காலத்திற்கு மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளில் சுமார் 40-60 கி.மீ இடைவெளியில் சாலைப் பயனாளர்களுக்கு கழிப்பறைகள், வாகன நிறுத்துமிடங்கள், உணவகங்கள், குறுகிய கால தங்குமிடங்கள், எரிபொருள் நிலையம், EV சார்ஜிங் நிலையங்கள், குடிநீர் போன்ற அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை, தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகள் வழியாக 102 வழியோர வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளன. (NHLML), இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் (NHAI) முழுச் சொந்தமான நிறுவனமாகும். கூடுதலாக, NHLML ஆல் உருவாக்கப்பட்டு வரும் வழித்தட வசதிகளை பூர்த்தி செய்யும் வகையில் வழங்கப்படும் வசதிகளை தரப்படுத்துவதன் மூலம் பயணிகளுக்கான சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் NH களில் இருக்கும் வசதிகளை ஆன்போர்டு செய்ய ஹம்சஃபர் கொள்கையையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பராமரிப்பு நடவடிக்கைகளை திறம்பட மற்றும் சரியான நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக, அனைத்து செயல்படுத்தும் முகவர்களும் கண்காணிப்பு ஆலோசகர்கள் மற்றும் கள அதிகாரிகள் மூலம் வழக்கமான ஆய்வுகள் மற்றும் சோதனைகளை மேற்கொள்கின்றனர். கூடுதலாக, நெட்வொர்க் சர்வே வாகனங்கள் (NSVs) மூலம் அவ்வப்போது கணக்கெடுப்பும் சாலையின் நிலையை மதிப்பிடவும் கண்காணிக்கவும் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வுகள் / சோதனைகளின் முடிவு களின் அடிப்படையில், ஒப்பந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் கள் / சலுகைதாரர்கள் மூலம் கள அலகுகளால் தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், தேசிய நெடுஞ்சாலைகள், விரைவுச்சாலைகளில் பராமரிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமும் NHAI One செயலியைப் பயன்படுத்துகிறது. ஒப்பந்த ஒப்பந்தத்தின் கீழ் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இந்த குறைபாடுகளை சரிசெய்வதற்காக ஒப்பந்ததாரர்/சலுகைதாரர் எடுத்த நடவடிக்கையும் இந்த ஆப் மூலம் கண்காணிக்கப்படுகிறது என்று கூறினார்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் கூறினார்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கைப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், ஆக. 1 - அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில், ஒன்றிய நகர கழக செயலாளர்களுடன் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை பணிகள் குறித்தும் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்தும்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து ஆலோசித்து உரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேலிட பார்வையாளர் அன்பரசன், குன்னம் சட்டமன்ற தொகுதி மேலிட பார்வையாளர் அருண், ஒன்றிய கழகச் பொறுப்பாளர்கள் தனசேகர்,இரா.கென்னடி, நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ. கருணாநிதி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், இரா.மணிமாறன்,

ம.அன்பழகன், ரே. அசோக சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ரெங்க. முருகன், ஆர். கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப. தனவேல், தெய்வ.இளையராஜா ,நா. கணேசன், பொன். செல்வம், கே.ஜி. எஸ். முருகன், இரா, செந்தில்குமார், ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை!

# வல்லம் ஒன்றியத்தில் புதிய நியாயவிலைக் கடை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

செஞ்சி, ஆக.1- விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார்மங்கலம் ஊராட்சியில் அரசு பள்ளிகளின் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கான புத்துயிர்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.32.80 லட்சம் மதிப்பீட்டிலும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.12.70 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுத ரவிக்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் மாணிக்கம் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ரூ.45 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 வகுப்பறையுடன் கூடிய பள்ளி கட்டிடம், நியாயவிலை கட்டிடத்தை திறந்துவைத்து பொதுமக்களுக்கு நல திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் தமிழ்நாட்டில் மக்களுக்காகவும் இந்த இரவு பகல் பாராமல் முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் மகளிர் விடியல் பயணம். மகளிர் உரிமைத்தொகையும், கல்வித்துறையில் மாணவ மாணவிகள் சிறந்த கல்வி கற்பதற்காக முதலமைச்சரின்காலை சிற்றுண்டி திட்டம், புதுமைப் பெண், தமிழ் புதல்வன், நான் முதல்வன்திட்டம் போன்றதிட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கலைஞரை மிஞ்சிய எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார் 28 மாநிலங்களில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது அந்த வகையில் பொதுமக்களாகிய நீங்கள் அனைவரும் முதலமைச்சருக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமதாஸ், இளங்கோவன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வனிதா சுபாகரன், ஒன்றிய நிர்வாகிகள்ஏழுமலை, லட்சுமணன், பழனி, கிருஷ்ணமூர்த்தி, பாண்டியராஜன், ராமதாஸ்,பன்னீர் கதிரவன், கலைசிவசங்கரன், ரவிச்சந்திரன், கார்வண்ணன், மாவட்ட கவுன்சிலர்சசிகலா மோகனசுந்தரம், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் சௌந்தரபாண்டியன்கோவிந்தன் அன்பரசு மகாவிஷ்ணு சுப்ரமணி ராஜ்குமார் அறிவழகன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை! வே.டில்லிபாபு தலைமை!

# ஆலந்தூர் வடக்குப் பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் அறிக்கை!

சென்னை, ஆக. 1- ஆலந்தூர் வடக்குப் பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் விடுதுள்ள அறிக்கை வருமாறு:

ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை 02.08.2025 சனிக்கிழமை மாலை 5 மணியளவில், ஆலந்தூர் கத்திபாராவில் (ஜோதி திரையரங்கம் அருகே) அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் வே.டில்லிபாபு தலைமையில், பகுதி நிர்வாகிகளான கோ.கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், ஜெயா செல்வம், எம்.சையத் அபுதாகீர் ஆகியோர் வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துக் கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே ஆலந்தூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதி கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA-2), கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள்: 1) கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகை புரிவது தொடர்பாக.

2) ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக

3) கழக ஆக்க பணிகள்

ஆலந்தூர் வடக்குப் பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் தெரிவித்துள்ளார்.





விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார்மங்கலம் ஊராட்சியில்அரசு பள்ளிகளின் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கான புத்துயிர்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.32.80லட்சம் மதிப்பீட்டிலும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.12.70லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடங்களை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமதாஸ், இளங்கோவன், ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் மாணிக்கம், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணிஅமைப்பாளர் தமிழரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.





இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 53வது வட்டத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், 53வது வட்ட மாமன்ற உறுப்பினர்கள் வேளாங்கண்ணி, வட்ட செயலாளர் கௌரிஸ்வரன், தீயணைப்புத்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் சென்னை மாநகராட்சி அதிகாரிகள், மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.